உரிமைக்களுக்கான அசைவுகள்

நிலைமாற்றத்திற்கான மனித உரிமைகள் கல்வி தொடர்பான பயிற்சிகளின் தொகுப்பு

UKRI Arts and Humanities Research Council
GCRF Global Challenges Research Fund
University of Essex
Coventry University
VisAbility
MERANGA Fine Arts Ensemble Art Institute

"சவிவர ரங்கன" திட்டம்

"சவிவர ரங்கன" (Perfoming Empowerment) திட்டமானது (2016-2018) இலாப நோக்கற்ற, ஜெர்மன்-இலங்கை சங்கமான VisAbility, நடன ஆராய்ச்சி மையம் (Coventry University, UK) மற்றும் Dundee நீதி வித்தியாலயம் (University of Dundee, UK) ஆகியவற்றால் நடத்த பட்டன. அதட்கு ஐக்கிய இராச்சியத்தில் கலை மற்றும் மனிதநேய ஆராய்ச்சி கவுன்சில், பொருளாதாரமற்றும் சமூக ஆராய்ச்சி கவுன்சில் (PACCS/GCRF மானியம் மூலம்) மற்றும் ஜெர்மன் ஃபெடரல் வெளியுறவு அலுவலகம் ஆகியவற்றால் ஆதரவு வளங்கப்பட்டது.

நன்றி

கருத்து: லாஸ் வொல்டோஸ்,ஹெடி ப்லேட்ச் மற்றும் VisAbility
எழுதியவர்: லாஸ் வொல்டோபஃ
ஹெடி ப்லேட்ஸ் மற்றும் ஹெலேனா உல்ரிக் மரம்பியொ
தமிழ் மொழிபெயர்ப்பு: ஹப்சா வஹப்தீன்
சிங்கள மொழிபெயர்ப்பு: காயத்ரி கமகே
வடிவமைப்பு: கீதிகா பெரேராவுடன் ஆலிஸ் மார்லோ
புகைப்படம்: ஸெபாஸ்டியன் பொவதேபஃ
ஒருங்கிணைப்பு: விபாவினி அர்பிரடிட்

நடைமுறை குறிப்புகள் மற்றும் ஊக்கம்: டிபஃனி பெரி, நிலஞ்சனா பேமரத்ன, தினேஷா சமரரத்ன, மஹே ஷ் உமகிலிய மற்றும் நிர்மி விதாரண.

இவ் பயிற்சி தொகுப்பின் பல்வேறு பதிவ்கள் முதல் முறையாக ஆகஸ்ட் 2018 இல் VisAbility ஆல் சோதிக்கப்பட்டது.(ஹெடீ ப்லேட்ச் மற்றும் லாச் வொல்டோப்ஃ உடன்) நடத்தப்பட்ட நிகழ்வில்.இவ் நிகழவை மியானி தொழில் நிலையம்(மட்டக்களப்பு), காது கேளாதவர்கள் மற்றும் பார்வையற்றவர்களுக்காக உள்ள நஃபீல்ட் பாடசாலை (யாழ்பானம்),மற்றும் மெரங்கா அலகியல் கலை நடன அரங்கம் (வத்தல)

தொடர்பு கொள்ள!

நீங்கள் இவ் அட்டைகளை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்த தகவல்களை **rightsmoves@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்யவும். அதன் மூலமாக உங்கள் சூழலுக்கு மிகவும் பொறுத்தமான அணுகுமுறையை எங்களுக்கு வடிவமைக்க முடியும்.

உரிமைகளுக்கான இயக்கங்கள்: மாற்றும் மனித உரிமைகள் கல்விக்கான பயிற்சிகளின் தொகுப்பு:

1) சுருக்கம்

இந்த பயிற்சிகளின் மூலமாக உரிமைவாதிகளுக்கு மற்றும் நடனக் கலைஞர்கள் மத்தியல், அவர்கள் செயல்படும் சமூகங்களில் உள்ள நபர்கலை அதிகாரமளிப்பதட்கு உரிமை கல்வி மற்றும் நடனத்தை இணைக்கும் செயல்முறைக்கு உதவுவது எப்படி என்பதை பற்றி ஆக்கபூர்வமான உரையாடலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

குறைபாடுகள் உள்ளவர்களின் உரிமைகள் மற்றும் உள்ளடக்கிய நடனம் அல்லது கலப்பு திறன் நடனம் ஆகியவற்றை ஒருங்கிணைத்து இலங்கையில் நடத்தப்படும் கூட்டு ஆராய்ச்சி திட்டமான "சவிவர ரங்கன" திட்டத்தால் **(Performing Empowerment)** வெளிப்படுத்தியபடி, அன்றாட நடைமுறையில் பயன்படுத்தக்கூடிய ஆலோசனைகளை இந்த சிறு புத்தகம் முன்வைக்கிறது.

இந்தத் திட்டமானது உள்ளூர் மற்றும் சர்வதேச சட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகளைப் பற்றி அறிந்துகொள்வதற்கும் பல்வேறு திறன்கள் மற்றும் குறபாடுமிக்க பாவங்கள் உள்ளவர்களை ஒன்றாக நடனமாடுவதற்கும் நிகழ்வுகள் நடத்தியது.

இந்தப் நிகழவின் விளைவாக முன்மொழிவுகள், பல்வேறு அரசியல், கலாச்சார மற்றும் சட்டச் சூழல்களுக்கும், பங்கேற்பாளர்களின் இயல்புக்கும், அவர்களின் பிரச்சனைகழுக்கு பொருத்தமான குறிப்பிட்ட உரிமைகளுக்கும் ஏற்றவாறு மாற்றியமைக்கப்படும் திறமை உள்ளது.

இந்த சிறு புத்தகம் என்ன செய்யாது என்று சொல்வதும் முக்கியம். இது நடனம் மற்றும் உரிமையை பற்றி அறிவு இல்லாதவர்களுக்கு அந்தத் துறைகளைக் கற்பிப்பதற்கான தனிக் கையேடு என்று இதை கூற முடியாது. உரிமைகள் விழிப்புணர்வு அல்லது நடன அமர்வுகளை நடத்துவதற்கு தேவையான அடிப்படை திறன்களை இதன் மூலமாக வழங்கப்படாது. மேற்கூறிய பாடங்கள் தொடர்பான உள்ளூர் அறிவு மற்றும் நிபுணத்துவத்தைப் பெறுவதற்கு இது மாற்றாக அமையாது. உரிமைகள் அடிப்படையிலான நடன அணுகுமுறையைப் பயன்படுத்தி மக்களை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தும் நிகழ்ச்சிகளை வடிவமைக்க அல்லது நடனம் மற்றும் உரிமைகள் பற்றிய கல்விக் கூறுகளைக் கொண்ட திட்டங்களை வடிவமைக்க இந்த கையேட்டை ஒரு ஆக்கப்பூர்வமான கருவியாகப் பயன்படுத்த அதிக பயிற்சியாளர்களை ஊக்குவிப்பதே எங்கள் எதிர்பார்ப்பு.

2) உரிமைகள் மற்றும் நடனத்தை இணைத்தள்

மனித உரிமைகள் என்றால் என்ன?

மனித உரிமைகள் மூலமாக தனிநபர்கள் மற்றும் சமுதாயம் மூலமாக முக்கியம் அற்ற என்று கருதப்பட்ட குழுக்களுக்கு பொதுவான அரசியல், சமூக, கலாச்சார மற்றும் சட்ட கட்டமைப்பில் ஒரு வாய்ப்பை வழங்குகிறது, அத்துடன் அரசாங்கத்திடம் இருந்து அவர்கள் பெற வேண்டிய உரிமைகளைப் பெறுவதற்கான சம வாய்ப்பையும் வழங்குகிறது. உள்நாட்டு அரசியலமைப்புகள் மற்றும் சட்டங்கள் மற்றும் சர்வதேச உடன்படிக்கைகளில் பல முக்கிய மனித உரிமைக்கோட்பாடுகள் உள்ளன.

அதாவது;

- கண்ணியம்
- சமத்துவம்
- நேர்மை
- இறையாண்மை
- மரியாதை

இந்த அடிப்படைக் கொள்கைகள் பின்வரும் குறிப்பிட்ட உரிமைகளை வலியுறுத்துகின்றன:

- பாகுபாடு இல்லாமை மற்றும் சமத்துவம்.
- அரசியல், சமூக, கலாச்சார மற்றும் சட்ட நடவடிக்கைகளில் பங்கேற்பு.
- மற்றவர்களுடன் சுகந்திர நிறுவனம் மற்றும் அமைதியான கூட்டம்.
- தகவல்களை அணுகும் திறனை வளர்த்தள்.

மக்களின் உரிமைகளுக்கு மரியாதை செலுத்துதல்,பாதுகாத்தல் மற்றும் தங்கள் கடமைகலை நிறைவேற்ற அவர்களுடைய அரசாங்கங்களை ஊக்குவிக்க பயனுள்ள கருவிகளை வழங்குகின்றன. உதாரணமாக, ஒரு அரசாங்கம் மனித உரிமைகள் உடன்படிக்கைகளின் கீழ் ஒப்புக்கொண்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்றால், மக்கள் மற்றும் அவர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புக்கள் தங்கள் அரசாங்கத்தை மட்டுமல்ல, ஐ.நா மனித உரிமைகள் பேரவை மற்றும் ஐ.நா. ஒப்பந்த அமைப்புகளுக்கு அதை பற்றி கேள்வி எழுப்ப முடியும்.

மனித உரிமை கல்வி என்றால் என்ன?

மனித உரிமைகள் கல்வி மற்றும் பயிற்சிக்கான (2011) ஐக்கிய நாடுகளின் வெளியீடுக்குப் அடிப்படயில் ,மனித உரிமைகள் குறித்த கல்வியை மேம்படுத்த அனைத்து நாடுகளும் கடமைப்பட்டுள்ளன.மனித உரிமைகளுக்கான கல்வி என்பது "மக்கள் தங்கள் உரிமைகளை அனுபவிக்கவும் செயல்படவும், மற்றவர்களின் உரிமைகளை மதித்து அங்கீகரிக்கவும் அதிகாரம் அளிப்பது" ஆகும்.(ஐக்கிய நாடுகளின் வெளியீடு, 2011). மனித உரிமைக் கல்வி அனைவருக்கும் பொதுவானது. அதட்கு அரசு மற்றும் சிவில் சமூக ஆர்வலர்கள் உள்ளடங்குகின்ரன. உரிமைக் கலவியைப் பாடசாலைகளில் உள்ளேயும் வெளியேயும் வழங்கப்பட வேண்டும்.

சில கல்வியாளர்கள் மற்றும் சில பயிற்சியாளர்கள் "மாற்றும் மனித உரிமைகள் கல்வி" என்று அழைக்கும் கருத்துக்கு அதிக கவனம் செலுத்துவதாக தெரிகிறது. இது சர்வதேச உடன்படிக்கைகளின் உள்ள வாக்குறுதிகளுக்கு குறைவான முக்கியத்துவத்தை வழங்குகிரது. அதுமற்றும் அல்ல உரிமைகள் பற்றிய உள்நாட்டில் பெற்ற அனுபவங்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகிரது. இங்கு, மேலிருந்து கீழுக்கு கற்பித்தலைக் விட, கீழிருந்து மேல் பங்கேற்பு மற்றும் அனுபவம் சார்ந்த கற்பித்தல் நடைபெறுகிறது. தகுந்த மனித உரிமைகள் கல்வி மூலமாக மக்களுக்கு அதிக விழிப்புணர்வு, அதிக தன்னம்பிக்கை மற்றும் சுறுசுறுப்பான குடிமக்களாக ஆகுவதடகான அறிவு மற்றும் திறன்களை தருகின்றன. இதன் மூலமாக அவர்களின் உரிமைகளை (தனியாகவும் கூட்டாகவும்) பெற, அநீதியான சமூக கட்டமைப்புகளுக்கு சவால் விடவும் உதவுகிறது. ஒட்டுமொத்தமாக எடுத்துக் கொண்டால், தகவமைப்பு மனித உரிமை கல்வியானது தனிநபர்களை மாற்றுவதட்கு (உளவியல் ரீதியாகவும் அறிவு ரீதியாகவும்) மற்றும் அவர்களின் சமூகங்களை மாற்றுவதற்கான நடைமுறைக் கருவிகளை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மனித உரிமைக் கல்வியில் நிகழ்த்து கலைகளை ஏன் பயன்படுத்த வேண்டும்?

ஐக்கிய நாடுசபைகளின் அறிக்கைக்கு அமைவாக மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த கலைகளைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கிறது. இதேபோல், தொடர்புடைய மனித உரிமைக் கல்வியானது செயலில் அல்லது பங்கேற்பு அடிப்படையிலான முறைகளை வலியுறுத்துகிறது: "சிரிப்பது, விளையாடுவது, பாடுவது மற்றும் சேர்ந்து நடனமாடுவது போன்ற பிரிக்கும் சமூக தீர்மானங்களை மீறி அதட்கு பங்கேற்பாளர்கள் பொதுவான மனித உணர்வுகளை அனுபவிக்க அனுமதிக்கிறது." (பஜாஜ், சிஸ்லாகி மற்றும் மெக்கீ 2016).

உடலுடன் மற்றும் அதன் மூலம் கற்றல் ("உடல் கற்றல்") கருத்துக்கள் மற்றும் யோசனைகளை நன்கு புரிந்துகொள்ள வழிவகுக்கிறது என்று சில ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. நடனத்தில் நடிப்பில் அதே பணியை மீண்டும் மீண்டும் செய்வது மற்றும் ஒரு செயல்திறனுக்கான ஒத்திகை செயலில் கற்றல் ஒரு பயனுள்ள முறையாக இருக்கும் என்பதற்கும் சில சான்றுகள் உள்ளன.

நடனத்தை ஏன் பயன்படுத்த வேண்டும்?

நடனம் என்பது நபர்கள் தங்கள் உடலைப் பயன்படுத்தி தங்கள் சுயத்தை வெளிப்படுத்துவதற்கான ஒரு ஊடகம் ஆகும். வார்த்தைகளிலால் சொல்ல கடினமாக இருக்கும் எண்ணங்களையும் உணர்வுகளையும் தொடர்பு கொள்ள அவர்களுக்கு உதவுகிறது. நடனம் இயக்கம், வலிமை, உடற்பயிற்சி, நெகிழ்வுத்தன்மை, ஒருங்கிணைப்பு மற்றும் தன்னம்பிக்கை ஆகியவற்றை மேம்படுத்தும்.

நடனம் என்பது ஒரு மத விழாவில் அல்லது ஒரு குழுவில் நடனமாக வெவ்வேறு நபர்களை ஒன்றிணைக்கும் ஒரு சமூக செயல்பாடு ஆகும். ஒரு நடன அமைப்பு நடனத்தில், நபர்களுக்கு ஒரு குழுவாக இணைந்து பணியாற்ற வேண்டும். அவர்களின் தனிப்பட்ட அசைவுகள் ஒரு பெரிய நடனமாக மாறும். இது அந்த மக்களுக்கு சமூக உணர்வைக் கொண்டுவருகிறது மற்றும் அவர்களிடையே நம்பிக்கையை பலப்படுத்துகிறது.

நாம் நம் உடலுடனும் மற்றவர்களுடனும் நெருக்கமாக வேலை செய்ம்போது நடனம் ஒவ்வொருவரின் தனித்துவத்தின் மீது கவனம் செலுத்துகிறது. நடனத்தின் மூலம், மனிதன் மற்றவர்களின் உடலைப் பார்ப்பதன் மூலமும் அசைப்பதன் மூலமும் மரியாதையையும் சகிப்புத்தன்மையையும் வளர்கின்ரன. உதாரணமாக, குறைபாடுகள் உள்ளவர்கள் மற்றும் இல்லாதவர்கள் ஒன்றாக நடனமாடுவது சமூக இழிவுகளை சமாளிக்கவும், சமூகத்தில் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொள்வதையும் புரிந்துகொள்வதையும் அதிகரிக்க உதவும்.

கற்பிக்க, பிரதிநிதிக்க மற்றும் மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை உயர்த்த, நடனத்தை பயன்படுத்தப்படுத்தி உள்ளன. பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான **One Billion Risining** இயக்கம் இதற்கு நன்கு அறியப்பட்ட உதாரணம் ஆகும். காலப்போக்கில், இயக்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட **"Break The Chain"** என்ர நடனப் பாடல், இந்தியா, தைவான் மற்றும் ஜெர்மனி போன்ற நாடுகளில் உள்ளூர் மாறுபாடுகள் மற்றும் புதிய நடன அமைப்புகளுடன் நிகழ்த்த ஊக்குவிக்கப்பட்டது: **www.onebillionrising.org/about/dance/**

One Billion Rising நிறுவனத்தின் படைப்பாளர் ஈவ் என்ஸ்லர் கூறும்படி, "நடனம் நமக்கு இடத்தை ஆக்கிரமிக்க அனுமதிக்கிரத்துடன்…நாம் ஒன்றாக அதை அடைகிறோம்."

3) இந்த அணுகுமுறையை எவ்வாறு பயன்படுத்துவது?

நடனம் மற்றும் உரிமைகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் திட்டமிட இந்தப் பயிற்சிகளின் தொகுப்பைப் பயன்படுத்தலாம். அதைப் பயன்படுத்த சரியான அல்லது தவறான வழி இல்லை. இது நடனம் மற்றும் உரிமைகளை எவ்வாறு ஒன்றாக இணைப்பது என்பது பற்றிய ஆக்கப்பூர்வமான சிந்தனையை ஊக்குவிக்கிறது. இந்த பிரிவில், இப் பயிற்சி தொகுப்பைப் பயன்படுத்துவதற்கான சில வழிகள் விவாதிக்கப்படுகின்றன, ஆனால் அவை விளக்கமாக இருக்க வேண்டும் மற்றும் பரிந்துரைக்கப்படக்கூடாது.

பயிற்சி தொகுப்புப் பெட்டியில் 4 அட்டை தொகுப்புகள் உள்ளன:

- தடைகள்
- அதிகாரமளித்தல் / திறன்
- உரிமை
- இயக்கம்/செயல்

உங்களுக்கு இந்த 4 தொகுப்புக்கலை அல்லது உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் தொகுப்பை பயன்படுத்தலாம். மேலும், ஒவ்வொரு தொகுப்பிலும், நீங்கள் விரும்பும் பல அல்லது சில அட்டைகளைப் பயன்படுத்தலாம். 3 தொகுப்பில் வெற்று அட்டை உள்ளதால் அவற்றுல் நீங்கள் விரும்பியவாரு உங்கள் நிகழ்வுக்கு பங்கேற்பாளர்களுக்கு மிகவும் பொருத்தமான தடைகள், உரிமைகள் மற்றும் நடன அசைவுகளை நீங்கள் எழுத முடியும்

வேலை செய்யக்கூடிய ஒரு வழி, உங்கள் நிகழ்வுக்குப் பங்கேற்பாளர்கள் எதிர்கொள்ளும் பாகுபாடு போன்ற ஒரு தடையைத் தேர்ந்தெடுப்பது மற்றும் தன்னம்பிக்கை போன்ற தடையை முகம் கொடுப்பதட்கு அவர்களுக்கு எந்த வகையான அதிகாரம் தேவை என்பதை தீர்மானிப்பது ஆகும்.

பின்பு பங்கேற்பாளார்களுக்கு கருத்துச் சுதந்திரம் போன்ற, அதிகாரத்தை அடைய உதவும் தனிப்பட்ட அல்லது கூட்டு உரிமைகள் என்பதை நீங்கள் தீர்மானிக்கலாம்.

இறுதியாக, மக்கள் முன்னாள் முன்வைத்தல் போன்ற ,பங்கேற்பாளர்களுக்கு தேவையான நடவடிக்கை அந்த உரிமைகளை "செயல்படுத்த" முடியும். இந்த ஒவ்வொரு படிநிலைக்கும், பொருத்தமான நடன அசைவு அல்லது பணியைத் தேர்வுசெய்ய உதவும் அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

<u>உதாரணமாக;</u>

- தடை: பாகுபாடு ⟶ இயக்கம்: தடைகளின் தொடர்

தடைகள், பாகுபாட்டின் அனுபவங்களைக் குறிக்கும் போது உங்களால் 'தடை: பாகுபாடு' அட்டையை தெரிவு செய்து பின்பு 'இயக்கம்: தடைகளின் தொடர்' என்ற அட்டையைத் தேர்ந்தெடுக்கலாம். அப்பொழுது பங்கேற்பாளர்கள் அந்தத்

தடைகளுடன் செயல்படவும் தடைகளைச் வெற்றிபெறவும் கடப்பதற்கும் வழிகளைக் கண்டுபிடிப்பார்கள்.

- அதிகாரமளித்தல்: தன்னம்பிக்கை ⟶ இயக்கம்: சுயசரிதை

அடுத்து, நீங்கள் 'அதிகாரம்: தன்னம்பிக்கை' அட்டையைத் தேர்வு செய்யலாம். பின்பு 'இயக்கம்: சுயசரிதை' என்ற அட்டையுடன் அதை பொருத்த நீங்கள் முடிவு செய்வீர்கள். பின்பு பங்கேற்பாளர்கள் அவர்களால் தன்னம்பிக்கையைப் ஏற்படுத்துவதை பற்றிய கதையை முன்வைப்பதன் மூலம் 'தன்னம்பிக்கையை வெளிப்படுத்துதலுக்கு' இயக்கங்களைப் பயன்படுத்துவார்கள்.

- உரிமைகள்: கருத்துச் சுதந்திரம் ⟶ இயக்கம்: பிரிவினை

அடுத்து, நீங்கள் 'உரிமைகள்: கருத்துச் சுதந்திரம் ' என்ற அட்டையைத் தேர்வு செய்தால். பின்பு சுதந்திரமாக கறுத்து வெளிப்படுத்துவது 'இயக்கம்: பிரித்தல்' என்ற அட்டையால் குறிக்கப்படுகிறது என்று நீங்கள் நினைக்கலாம். பங்கேற்பாளர்கள் அவர்களாவே சுதந்திரமான வெளிப்பாட்டின் தன்னம்பிக்கையுல்ல வெளிக்காட்டாக மற்ற பங்கேற்பாளர்கள் அல்லது தடைகளிலிருந்து விலகுவார்கள்.

இறுதியாக, உடல்ரீதியாக செயல்படும் செயல், அதாவது, வெளியீடு, தனிப்பட்ட பங்கேற்பாளர்களின் பல்வேறு நடன அசைவுகளை (தடைகள், சுயசரிதை மற்றும் பிரிதல்) ஒன்றிணைப்பதன் மூலம் ஒரு நடன அமைப்பை உருவாக்க முடியும்.

அல்லது, உங்களால், தடைகள் (பாகுபாடு) → அதிகாரமளித்தல் (தன்னம்பிக்கை) → உரிமைகள் (கருத்துச் சுதந்திரம்). போன்ற அனைத்தையும் பிரதிநிதித்துவப்படுத்த ஒரே ஒரு நடன அசைவைப் பயன்படுத்த நீங்கள் தேர்வு செய்யலாம். உதாரணமாக, பங்கேற்பாளர்கள் தங்கள் பாகுபாடுகளை அனுபவித்த சம்பவத்தை விவரித்த, பின்னர் அவர்களுக்கு வாய்மொழி விளக்கத்தை நடன அசைவுகளாக (சுயசரிதை) மாற்றும் சொல்ல முடியும். பின்னர், பாகுபாட்டின் எதிர்மறையான அனுபவத்தை தன்னம்பிக்கையைப் பற்றி உள்ள நேர்மறை அனுபவமாக மாற்றும் ஒரு வழியாக தனிப்பட்ட இயக்கங்கள் இணைத்து ஒரு நடனத்தை உருவாக்கி பொதுவில் நிகழ்த்தலாம்.

முதல் உதாரணம், அட்டைகளைப் பயன்படுத்துவதற்கான ஒட்டுமொத்த செயல்முறை பின்வருமாறு விவரிக்கப்படலாம்:



மற்றொரு வழி, ஒவ்வொரு உறுப்புகளையும் ஒரு நடன இயக்கம் அல்லது பணியுடன் தொடர்புபடுத்துவது, தடைகளிலிருந்து உரிமைகளுக்கு அதிகாரமளித்தல் மற்றும் இறுதியாக உள்ளடக்கிய செயலுக்கு நகர்வோம்.



இதத் தவிர, நீங்கள் நேரியல் அல்லாத முறையை விரும்பலாம். உதாரணமாக, நீங்கள் ஒரு தடையுடன் தொடங்கி அதை வெவ்வேறு வழிகளில் அணுகலாம் - அதிகாரமளித்தல் மற்றும் உரிமைகள் மூலம் தொடர்புகொள்ள முடியும்.

இது வெறும் ஓர் உதாரணம் மற்றுமே. ஒற் வகுப்பு, நீட்டிக்கப்பட்ட நிகழ்வு அல்லது வெளியீடு ஆகியவற்றைத் திட்டமிட உங்களுக்கு உதவ முடியுமான எந்த அட்டையையும் எந்த வரிசையிலும் பயன்படுத்தலாம்.



4) இனையத்தில் கிடைக்கும் சில ஆதாரங்

அதிகாரமளித்தல்

John Gaventa, "Reflections on the Uses of the 'Power Cube' Approach for Analyzing the Spaces, Places and Dynamics of Civil Society Participation and Engagement" (Institute of Development Studies 2005).

Lisa VeneKlasen and Valerie Miller, *A New Weave of Power, People & Politics: The Action Guide for Advocacy and Citizen Participation* (World Neighbors & The Asia Foundation 2002).

மனித உரிமைகள்

மனித உரிமைகள் தொடர்பான சொற்களின் வரையறைகளை வழங்கும் பல அகராதிகள்/தொகுப்புகள் உள்ளன.

- hrlibrary.umn.edu/edumat/hreduseries/hereandnow/Part-5/6_glossary.htm
- www.msubillings.edu/cas/nams/Taliman/1.30%20Human%20Rights%20Glossary.pdf

மனித உரிமைகள் பற்றி அறிந்து கொள்வதற்கு குறிப்பிட்ட குழுக்கள் வெவ்வேறு ஆதாரங்களைக் கொண்டுள்ளன. உதாரணமாக:

- Children: Plan International, "Learn about Your Rights!"
- Girls' Rights: Malala Fund, "Girl Advocate Guide"
- People with Disabilities: Harvard Law School Project on Disability, "Change Your Life with Human Rights" (2008).

மனித உரிமைகள் கல்வி

Monisha Bajaj, Beniamino Cislaghi and Gerry Mackie, *Advancing Transformative Human Rights Education: Appendix D to the Report of the Global Citizenship Commission* (Open Book Publishers 2016).

United Nations General Assembly, *United Nations Declaration on Human Rights Education and Training* (2011).

நடனம்

Dana Mills, *Dance & Politics: Moving Beyond Boundaries* (Manchester University Press 2017), "Introduction".

"One Billion Rising".

Anthony Shay, "Dance and Human Rights in the Middle East, North Africa, and Central Asia." In Dance, Human Rights, and Social Justice: Dignity in Motion, eds. Naomi Jackson and Toni Shapiro-Phim (Scarecrow Press 2008) 67-85.

எசெக்ஸ் பல்கலைக்கழகம்
விவென்ஹு பார்க்
கொல்செஸ்டர் CO4 3SQ
ஐக்கிய ராச்சியம்

முன்னட்டை வடிவமைப்பு:
வினா புஸ்பிட்ட

புகைப்படங்கள்:
விஸ்ஸபிலிட்டி e.V.

நிதியனுசரணையாளர் :
கலை மற்றும் மனிதஉரிமைகள் ஆய்வு சபை(UK), உலகளாவிய சவால்களுக்கான ஆய்வு நிதி(GCRF)

திட்டம்:
வலுப்படுத்தலை ஆற்றுகைசெய்தல் -
யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் மாற்றுத்திறன், நடனம் மற்றும் உள்வாங்குதலுடன்கூடிய அபிவிருத்தி